



செம்பன்குன்று பூநகரியைப் பிறப்பிடமாகவும்
சோலை பல்லவராயன்கட்டை
வாழ்விடமாகவும் கொண்ட

# அமரர் நடராசா இராசபூமணி

அவர்களின் மறைவு குறித்த

# நினைவுமலர்

25-07-2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செம்பன்குன்று, பூநகரியைப் பிறப்பிடமாகவும்,
சோலை பல்லவராயன்கட்டை
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் நடராசா இராசபூமணி

அவர்களின் மறைவு குறித்த
நினைவுமலர்
**25.07.2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை அன்புடன்
வளர்த்து
அமரத்துவமடைந்த
எம் அம்மாவிற்கு

# சமர்ப்பணம்

*பண்பிலே தெய்வமாய்*
*பாசத்தின் இருப்பிடமாய்*
*இன்சொல் பேசி இனிதே பழகி*
*அன்புடனும் நேசமுடனும் வாழ்ந்து*
*ஆல் போல் இருந்து எமைக்காத்து*
*எம் குடும்பத் தலைவியாய் விளங்கி*
*இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட*
*எமது இதயத் தெய்வத்தின்*
*ஆத்மா சாந்தி பெற வெண்டுமென்று*
*இறைவனை பிரார்த்தித்து*
*அமரர் தம் பாதக்கமலங்களில்*
*இம்மலரினை சமர்பபிக்கின்றோம்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை மடியில்

1946

08

29



இறைவனடியில்

2021

06

25

அமரர்

# நடராசா இராசபூமணி

## திதி நிர்ணய வெண்பா

சீர் பெரும் பிலவி வருஷம்
ஆனித் திங்கள் ஆன
சுக்கிரவார பிரதமை திதியாம்
சீர் பெறும் இராச பூமணி எனும்
நல்லாள் இறைவனடி சேர்ந்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன்1 உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தஅருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே.

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரை
யார்கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக்
கண்டுகொள்ளே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோன்அடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீயாடும்போது உன் அடியின்கீழ் இருக்க வென்றார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் - குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் -தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற-குமரேசா
அறநாலைப் புகல்வோனே அவிநாசிப்- பெருமாளே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் நடராசா இராசபூமணி



# வாழ்க்கைச் சுருக்கம்

நித்திலம் கொளிக்கும் இந்து சமுத்திரத்தில் திகழும் இலங்கை தீவினிலே வடபால் அமைந்த நீர்வளம், நிலவளம் நிறைந்து விளங்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் நெல்விளையும் பொன்னகராம் பூநகரில் மட்டுவில் நாடு கிராமத்தில் வாழ்ந்த உயர்திரு. சைவ. வேளாண் குல கந்தர்- சீதவனா தம்பதியினரின் மகனாம் தாமோதரம்பிள்ளை எனும் மணாளன் பூநகர் செம்மண்குன்று வாழ் சைவ வேளாண் குல வைத்திலிங்கம் அன்னம்மா தம்பதியினரின் மகள் செல்லாம்மாவும் இணைந்து இனிதே நடாத்திய இல்லறவாழ்வின் பயனாக (1946ஆம்) ஆண்டில் பூமியில் பிறந்தார் இராசபூமணி.

தனது பள்ளிக்காலத்தினை கிளி / செம்மண்குன்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நிறைவு செய்து கொண்டவர். குடும்பத்தின் மூத்தமகள் ஆனதால் தந்தை, தாயுடன் வீட்டுப்பணியையும் செவ்வனே செய்து வந்தாள். தம்பியர் ஆறு தங்கைகள் நால்வருடனும் கூடவே வாழ்ந்து வரும் நாளில் மங்கை மணியும் திருமண வயதை அண்டியே வரவும் இல்லறவாழ்வில் இணைக்கவே விரும்பிய பெற்றவள் தாங்களும் கன்னிப் பெண்ணுக்கு மணமகன் தேடிய வேளையில் சாவகச்சேரி கல்வயல் வாழ் சைவ வேளாண் குல செல்லையா பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் மகனாம் நடராசாவை மணமகனாக தேர்ந்தெடுத்து திருமணத்தினை இனிதே நிறைவேற்ற (1946) இராசபூமணியின் இல்லறவாழ்வின் சிறப்பினைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு இனிதே ஓர் ஆண் மகனாக தெய்வேந்திரனும் வந்து பிறந்திட அடுத்தோர் ஆண் மகன் பாலேந்திரனும் வந்து கூடவே மகளாய் பத்மாவதியுடன் குலேந்திரன் நல்லதே மக்கள் நால்வரையும் பெற்று நல்லதோர் வாழ்வை நடாத்தியே வந்தாள்.

" உழுதுண்டு வாழ்வோர்க்கு ஒப்பில்லை கண்டீர் பழுதுண்டு வேறோர் பணிக்கு"

எனும் குறளுக்கு அமைவாக நல்லதோர் தோட்டமும் செம்பண்குன்றில் மட்டுமன்றி அயல்குளமாம் கொடுதாவில் வரை சென்று செய்தவர்கள் குடும்ப பொருளாதாரத்தினை மேலும் வளப்படுத்து நோக்கில் பூநகரியின் தென்பால் அமைந்துள்ள நல்லதோர் பழங்குடி ஊராம் பல்லவராயன்கட்டு அதனுடன் இணையவே கரியாலை நாகபடுவான் குடியிருக்க வந்தார் இராசபூமணியும் (1986)

செம்பன்குன்றும் பல்லவராயன் கட்டும் என வாழ்ந்த காலமதில் மூத்தமகனும் இல்லறவாழ்வில் இணைந்து கொள்ளவே மக்களுடன் மருமகளும் இணைந்து பேரனும் வந்து கூடவே இன்பமாய் வாழ்ந்த காலமதில் பாலனாம் பாலேந்திரனை இழந்து நொந்துமே வாடி நின்றவள் தேறிட காலமது சென்றதுவே இந்தவேளையில் தன் மகளை திருமணம் செய்து வைக்க தேடியவள் நன்றே திருமணமும் நடாத்தி வைக்க வந்து பிறந்தார் பேரனும் காலத்தில் நிலை மாறியே கொன்றுவிட்டான் காலனவன் மருமகனை இவ்வாறு சோகமாய் கடந்தது பூமணியின் வாழ்நாளும்.

இந்த வேளையில் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக பல்லவராயன்கட்டில் இருந்து இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்கால் வரை பயணம். இந்த வேளையில் தன்மகனின் திருமணத்தை நடத்தவே எண்ணி நாளும் கலங்கிய வேளை நல்லதோர் வாழ்வு தேடியே வந்தமைய நன்றாய் நடந்தது திருமணமும் பேரப்பிள்ளைகளுடனும் நன்றாய் வாழ்வும் மகிழ்வாய் சென்றகாலமதில் தான் நோய்நொடி பாய்படுக்கை ஏதுமின்றி தன் வேலைதனை தானே மகிழ்வாய் செய்யும் வேளைதனில் பொல்லாத காலனவன் இராசபூமணி எனும் மணியின் ஓசைமூச்சினை நிறுத்தி 25.06.2021 காலை 6.20 மணியளவில் பரமனடி கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயும் தனயனும்



நடராசா இராசபூமணி

மண்ணில்:- 1946-08-29

விண்ணில்:- 2021-06-25



நடராசா பாலேந்திரன்

மண்ணில்:- 1971-03-13

விண்ணில்:- 1996-07-20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25ம் ஆண்டு நினைவு



அன்னை மடியில்

1971
03
13

இறைவனடியில்

1996
07
20

அமரர்

## நடராசா பாலேந்திரன்

நெல் விளையும் பொன்னகராம் அந்த
பூநகரி செம்பன்குன்றில்
பூத்த கொடி இது
அன்னை மடியில் பாலனாய் திகழ்ந்து
அன்னையைப் பிரிந்து முத்தென திரிந்தீர்
முத்தென திரிந்த நீர் முல்லையில்
வீழ்ந்தீரோ முத்தாக
இருபத்தைந்தாண்டுகள் சென்றாலும்
மறவாது இம்மண் எப்போதும்
உம்மை......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியெங்கு காண்போம்

வாடியே துடிக்கின்றோம் வையத்தே நின்பிரிவால்
ஓடியே வந்தெம்மை துயரகற்றமாட்டாயோ
கூடியே வாழ்ந்தோம் குறைவிலாதென்றும்
தேடுகின்றோம் உன்னை தூயவளே ஏன் மறந்தாய்
வாழ்வினில் ஒளியேற்றி வைத்த குலவிளக்கே
வையத்தே உன்பிரிவால் வாடுவதை அறியாயோ
தேடற்கரிய செல்வமே தேனமுதே
பாரினில் உன்னை இனியெங்கு காண்போம்.

கணவன் , பிள்ளைகள்





# பிள்ளைகள் புலம்பல்

எமதருமைத் தாயே முத்தென எமைப்பெற்ற தெய்வமே!
இந்திரர் என்றல்லோ செல்லமாய் பெயர் வைத்தீர்
உங்கள் கடும் சொல் கேட்டறியோம் நாம்
கலங்கியதை நீங்கள் பார்த்ததில்லை நாம்
கண்ணீர் விட்டதை கண்டதில்லை
அப்படியோர் நிலைவர விட்டதுமில்லை
நீங்கள் பிரம்பெடுத்து அடித்ததில்லை
பிரியமான வார்த்தை பேசியல்லோ எம்மை
தந்திரமாய் வளர்த்தீர்கள்
உங்கள் அஞ்சா மொழி கேட்டு
அஞ்சாமல் வாழ்ந்த நாம் இப்போ
ஆடியெல்லலோ போனோம் அம்மா
நீங்கள் இல்லா இவ்வுலகில் எமக்கேது ஆறுதல்
உங்கள் புன்னகைபூத்த முகம் பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிய நாட்களை மறக்க முடியுமோ அம்மா
இத்தனை நாட்கள் வழி நடாத்திய நீங்கள்
இப்படி இடைநடுவில் விட்டு சென்றதன் காரணந்தான்
நாமறியோம்

இன்றுவரை கட்டளை போட்ட நீங்கள்
கடுதியாய் எங்கு சென்றீர்கள் - அதன்
கருத்தறியோம் யாம் மென்றும்
எம் நெஞ்சம் கல்லங்கரையாமலிருக்க
கனக்குதம்மா எம் நெஞ்சம்
கருத்துடன் வாழ்ந்த நாம் இப்போ
கடமைக்காக வாழ்கின்றோம்
நோயுற்று இருந்தால் கதறுவோம் என்றோ
கடுகதியாய் போனீர்கள்
ஆறாய் பெருகுதம்மா கண்ணீர்
ஆறமாட்டோம் நாம் இனி
ஆற்ற ஆர்வருவார் அம்மா....?

## மருமக்கள் இரங்கல்

மாமி என்று ஒருபோதும் நாம் அழைத்ததில்லை
அம்மா என்றுதான் அழைத்தோமல்லவா
எம்தாய்க்கு இணையாகவே நாம் உங்களை மதித்தோம்
பேரன்பு கொண்டு பிரியமுடன் எமைக்காத்த
பேறுயர் மாமியே பிரிந்து சென்றதேனோ
பாரினில் உங்களின் பிரிவை தாங்கிடாது
பெருந்துயர் அடைந்தே வாடுகின்றோம் மாமியே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரன், பேர்த்திகள் குமுறல்

எம்மனதில் ஆழமாக இடம்பிடித்த அப்பாம்மாவே, அம்மம்மாவே
உங்களிடம் பேசிய நாட்களில்
எம்மனதில் பதித்த சொற்கள் ஆயிரமாயிரம்
உங்கள் மொழி எங்களுக்கோர் தனிமொழி
இனி யார் வருவார் உங்களைப் போல்
உங்கள் கதைகளை இனி எப்போது கேட்போம்
ஒருகணம் எங்கள் முன்வந்து போகமாட்டீர்களோ
என ஏங்கித் தவிக்கின்றோம் நாம் இங்கு
நாங்கள் கேட்ட செய்தி பொய்யாகமாட்டாதோ
என எங்கள் பிஞ்சு மனம் பேதலிக்கின்றது இங்கே

## வாடுவதை அறியாயோ அக்கா

உடன்பிறந்தோர் உன் பிரிவால் வாடுவதை அறியாயோ
திடமிழந்தோம் சோதரியே தரணியிலே நின்பிரிவால்
வடமிழந்த தேர்போலாகிவிட்டோம் சோதரியே
வையத்தே உந்தன் வதனமினி காண்போமா!

– சகோதர சகோதரிகள்

## மைத்துனர், மைத்துனிமார் கலக்கம்

மதிநிறை மைத்துனியாய் மாநிலத்தே மிளிர்ந்தாய்
அதிதுயர் எமக்களித்து அகற்றுமேன் சென்றீர்
விதியதை மண்ணில் மாற்றிட முடியுமா
புவிதனில் உந்தன் பொன்முகம் காண்போமா!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியக்காக ....

செம்மண்ணின் தலைமகளாம் முத்தனயை முகத்தவளாம்
புன்னகையின் இலக்கணமாய் பொன்மகளாம் பெரியக்கா...!

குடும்பத்தின் முதல்விளக்கு குலவிளக்காய் எரியுமென
மாங்கல்ய பந்தமதைப் பெற்றவர்கள் ஏற்றிவைக்க
மணவாழ்வின் இனிமையினை சிலகாலம் அனுபவித்து
சிறகடிக்கும் பருவமதில் சிறகொடிந்து போனோயே!

எத்துன்பம் வந்திடினும் எக்கேடு சூழ்ந்திடினும்
பக்குவமாய் அதை அணுகும் வித்தையடி உன் சிரிப்பு
துன்பங்கள் எமையழுத்த தூணாக நின்றாயே
கண்மணிபோல் எமைக்காத்த பொன்மணியே பெரியக்கா....

பெற்றவரின் அன்பினைத்து பொற்கரத்தால் எமையணைத்து
பத்துபேர் எம்வாழ்வை பக்குவமாய் புனைந்தாயே..!
வயிற்றுவலி வந்துவிட்டால் வைத்தியன்போல் எனையணைப்பாய்
கயிற்றிறைவன் அழைத்ததனால் கனதூரம் சென்றுவிட்டாய்...!

பெரியக்கா என அழைத்தால் பரவசமாய் இருக்குமடி
உனையிழந்த சோகமின்று எனைவதைத்து வாட்டுதடி
கனையிழந்த மனதினிலே புயலடித்து மாளுதடி
கணபதியின் பாதமதில் அமைதிபெற வேண்டுதடி....

– TM. மூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறாமக்கள் வட்டம்

பெற்றெடுத்த பிள்ளைகள் போலெம்மைப் பார்த்த
உற்ற நல்ல தாயே எங்கு நீர் சென்றீர்
வற்றிடா அன்பு கொண்டீரே வைத்தே
வாழ்வினில் உங்களை மறந்திட முடியுமோ!

## சுற்றம் உற்றம் சோகம்

உறவொடு ஒன்றி வந்தோம்
ஒன்றதாய் நன்று நின்றோம்
பிறவொரு மொழியும் சொல்லாள்
பெருமையில் மேல்நில்லாள்
அறமொடு அவனி மீதில்
அருமையாய் எமைப் பேணும்
திறமது பெற்ற முத்தே
தேடியே அடையலாமோ!

தேற்றம்

எண்ணதே கூட்டமாக
ஏசிடும் வயதே என்று
மண்ணதே மாய வாழ்வு
மாபெரும் துயர என்று
விண்ணதே வீடு கொண்டோர்
வீறுயர் வாழ்வு தன்னை
கண்ணதே மணியே என்று
கருதியே போற்ற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்

நினைமின் மனனே ! நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே ! நினைமின் மனனே !
அலகைத் தேரின் அலமரு காலின்
உலகப்பொய் வாழ்க்கையை உடலை ஓம்பற்க ! 1

பிறந்தன இறக்கும், இறந்தன பிறக்கும்
தோன்றின மறையும், மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்கும், சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கும், மறந்தன உணரும்
புணர்ந்தன பிரியும், பிரிந்தன புணரும் 2

அருந்தின மலமாம், புனைந்தன அழுக்காம்
உவப்பன வெறுப்பாம், வெறுப்பன உவப்பாம்
என்றிவை அனைத்தும் உணர்ந்தனை அன்றியும்
பிறந்தன பிறந்தன பிறவிகள் தோறும்
கொன்றனை அனைத்தும், அனைத்து நினைக்கொன்றன. 3

தின்றனை அனைத்தும், அனைத்து நினைக் கொன்றன்
பெற்றனை அனைத்தும், அனைத்து நினைப் பெற்றன்
ஓம்பினை அனைத்தும், அனைத்து நினை ஓம்பின்
செல்வத்துக் களித்தனை, தரித்திரத்து அழுங்கினை
சுவர்க்கத்து இருந்தனை, நரகில் கிடந்தனை 4

இன்பமும் துன்பமும் இருநிலத்து அருந்தினை
ஒன்றொன்று ஒழியாது உற்றனை அன்றியும்,
புற்புதக் குரம்பைத் துச்சில் ஒதுக்கிடம்
என்னநின் றியங்கும் இருவினைக் கூட்டைக்
கல்லினும் வலிதாகக் கருதினை இதனுள் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீளையும் நீரும் புறப்படும் ஒருபொறி
மீளுங் குறும்பி வெளிப்படும் ஒரு பொறி
சளியும் நீரும் தவழும் ஒருபொறி
உமிழ்நீர் கோழை ஒழுகும் ஒருபொறி
வளியும் மலமும் வழங்கும் ஒருவழி 6

சலமும் சீயும் சரியும் ஒருவழி
உள்ளூறத் தொடங்கி வெளிப்பட நாறும்
சட்டகம் முடிவில் சுட்டெலும் பாகும்
உடலுறு வாழ்க்கையை உள்ளூறத் தேர்ந்து,
கடிமலர்க் கொன்றைச் சடைமுடிக் கடவுளை. 7

ஒழிவருஞ் சிவபெரும் போகஇன் பத்தை,
நிலுலெனக் கடவா நீர்மையொடு பொருந்தி
எனதற நினைவற இருவினை மலமற
வரவொடு செலவற மருளற இருளற
இரவொடு பகலற இகபரம் அற ஒரு 8

முதல்வனைத் தில்லையுள் முனைத்தெழுஞ் சோதியை
அம்பலத் தரசனை ஆனந்தக் கூத்தனை
நெருப்பினில் அரக்கென நெக்குநெக் குருகித்
திருச்சிற் றம்பலத்து ஒளிருஞ் சீவனை,
நினைமின் மனனே ! நினைமின் மனனே ! 9

சிவபெரு மானைச் செம் பொனம்பலவனை
நினைமின் மனனே ! நினைமின் மனனே !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில் திரு அகவல் – 2

காதள வோடிய கலகப் பாதகக்
கண்ணியர் மருங்கில் புண்ணுடன் ஆடும்
காதலும் கருத்தும் அல்லால்நின் இருதாள்
பங்கயம் சூடப் பாக்கியம் செய்யாச்
சங்கடம் கூர்ந்த தமியேன் பாங்கிருந்து 10

அங்கோடு இங்கோடு அலமருங் கள்வர்
ஐவர் கலகமிட்டு அலைக்குங் கானகம்
சலமலப் பேழை இருவினைப் பெட்டகம்
வாதபித்தம் கோழை குடிபுகுஞ் சீறூர்
ஊத்தைப் புன்தோல் உதிரக் கட்டளை 11

நாற்றப் பாண்டம் நான் முழத்து ஒன்பது
பீற்றல் துண்டம் பேய்ச்சுரைத் தோட்டம்
அடலைப் பெரிய சுடலைத் திடருள்
ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம்
ஓயா நோய்க்கிடம் ஓடும் மரக்கலம் 12

மாயா விகாரம் மரணப் பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றும் பத்தம்
காற்றில் பறக்கும் கானப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டுங் கட்டை
சதுர்முகப் பாணன் தைக்குஞ் சட்டை 13

ஈமக் கனலில் இடுசில விருந்து
காமக் கனலில் கருகும் சருகு
கிருமி கிண்டுங் கிழங்கஞ் சருமி,
பவக்கொழுந்து ஏறுங் கவைக் கொழு கொம்பு
மணமாய் நடக்கும் வடிவின் முடிவில் 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணமாய்க் கிடக்கும் பிண்டம் பிணமேல்
ஊரில் கிடக்க வொட்டா உபாதி
கால் எதிர் குவித்தபூளை காலைக்
கதிர் எதிர்ப்பட்ட கடும்பனிக் கூட்டம்
அந்தரத்து இயங்கும் இந்திர சாபம் 15

அதிரும் மேகத்து உருவின் அருநிழல்
நீரில் குமிழி நீர்மேல் எழுத்து
கண்துயில் கனவில் கண்ட காட்சி
அதனினும் அமையும் பிரானே! அமையும்
இமைய வல்லி வாழிஎன் றேத்த 16

ஆனந்தத் தாண்டவம் காட்டி
ஆண்டுகொண்டருள்கை நின் அருளினுக்கு அழகே!

கோயில் திரு அகவல் – 3
பால்கடல் கடையப் படுங்கடு வெண்ணெயைத்
திருமிடற்று அடக்கிய சிவனே அடைக்கலம்!
அடங்கலும் அடக்கிடும் கடுங்கொலைக் காலனைக்
கால்எடுத் தடக்கிய கடவுள் நின் அடைக்கலம்
உலகு அடங் கலும்படைத்து உடையவன் தலைபறித்து 17

இடக்கையில் அடக்கிய இறைவ! நின் அடைக்கலம்!
செய்யபொன் னம்பலச் செல்வ! நின் அடைக்கலம்
ஐய! நின் அடைக்கலம் அடியன் நின் அடைக்கலம்
மனவழி அலைத்திடும் கனவெனும் வாழ்க்கையும்
விழுப்பொருள் அறியா வழுக்குமறு மனனும் 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவ மலத்துதித்து அளைந்ததில் உளைந்திடும்
நிணவைப் புழுவென நெளிந்திடு சிந்தையும்
படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்,
தவறும் அழுக்காறும் இவறுபொச் சாப்பும்
கவடும் பொய்யும் சுவடும் பெருஞ்சின 19

இகலும், கொலையும், இழிப்புறு புன்மையும்,
பகையும், அச்சமும், துணிவும், பனிப்பும்,
முக்குண மடமையும், ஐம்பொறி முயக்கமும்,
இடும்பையும் பிணியும் இடுக்கிய ஆக்கையை
உயிர் எனுங் குருகுவிட்டு ஓடும் குரம்பையை 20

எலும்பொடு நரம்புகொண்டு இடையில் பிணித்துக்
கொழுந்தசை வேய்ந்தும் ஒழுக்கு விழுங் குடிலைச்
செழும்பெழு உதிரச் சிறுபுழுக் குரம்பையை,
மலவுடல் குடத்தைப் பலவுடல் புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக் 21

கொலை படைக் கலம்பல கிடைக்கும் கூட்டைச்
சலிப்புறு வினைப் பலசரக்குக் குப்பையைக்
கோள்சரக்கு ஒழுகும் பீற்றல் கோணியைக்
கோபத்தீ மூட்டுங் கொல்லன் துருத்தியை,
ஐம்புலப் பறவை அடையும்பஞ் சரத்தை. 22

புலராக் கவலை விளைமரப் பொதும்பை,
ஆசைக் கயிற்றில் ஆடும்பம் பரத்தைக்
காசிற் பணத்திற் சுழலுங் காற்றாடியை,
மக்கள் வினையின் மயக்குந் திகிரியைக்,
கடுவெளி உருட்டிய சகடக் காலைப் 23
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்குக்
காமக் காற்றெடுத்து அலைப்பக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுவழிக் கரைசேர் கொடுமரக் கலத்தை
இருவினை விலங்கொடும் இயங்குபுற் கலனைக்
நடுவன்வந் தழைத்திட நடுங்கும் யாக்கையைப் 24

பிணமெனப் பருத்தியான் புறப்படும் பொழுதுநின்
அடிமலர்க் கமலத்துக்கு அபயம்நின் அடைக்கலம்
வெளியிடை உரும்இடி இடித்தென வெறித்தெழுங்
கடுநடை வெள்விடைக் கடவுள்நின் அடைக்கலம்
இமையா நாட்டத்து இறையே! அடைக்கலம் 25

அடியார்க்கு எளியாய்! அடைக்கலம் அடைக்கலம்
மறையவர் தில்லை மன்றுள்நின் றாடிக்
கருணை மொண்டு அலையெறி கடலே! அடைக்கலம்,
தேவரும் முனிவரும் சென்றுநின் றேத்தப்
பாசிழைக் கொடியொடு பரிந்து அருள் புரியும் 26

எம்பெரு மானின் இணையடிக்கு அபயம்
அம்பலத் தரசே அடைக்கலம் உனக்கே!

**கச்சித் திரு அகவல்**
திருமால் பயந்த திசைமுகன் அமைத்து
வரும் ஏழ் பிறவியும் மானுடத் துதித்து
மலைமகள் கோமான் மலர் அடி இறைஞ்சிக்
குலவிய சிவபதங் குறுகாது அவமே
மாதரை மகிழ்ந்து காதல் கொண்டாடும் 27

மானிடர்க் கெல்லாம் யானெடுத் துரைப்பேன்
விழிவெளி மாக்கள் தெளிவுறக் கேண்மின்
முள்ளும் கல்லும் முயன்று நடக்கும்
உள்ளங் காலைப் பஞ்சென உரைத்தும்,
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்கால் 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளும் வரால் எனச் சொல்லித் துதித்தும்,
தசையும் எலும்புந் தக்கபுன் குறங்கை
இசையுங் கதலித் தண்டென இயம்பியும்
நெடும் உடல் தாங்கி நின்றிடும் இடையைத்
துடிபிடி யென்று சொல்லித் துதித்தும், 29

மலமும் சலமும் வழும்புந் திரையும்
அலையும் வயிற்றை ஆலிலை யென்றும்,
சிலந்தி போலக் கிளைத்துமுன் னெழுந்து
திரண்டு விம்மிச் சீப்பாய்ந்து ஏறி
உகிரால் கீறல் உலர்ந்து உள் உருகி 30

நகுவார்க்கு இடமாய் நான்று வற்றும்
முலையைப் பார்த்து முளரிமொட் டென்றும்,
குலையும் காமக் குருடர்க்கு உரைப்பேன்
நீட்டவும் முடக்கவும் நெடும் பொருள் வாங்கவும்
ஊட்டவும் பிசையவும் உதவி இங் கியற்றும் 31

அலங்கையைப் பார்த்துக் காந்தள் என்றுரைத்தும்,
வேர்வையும் அழுக்கும் மேவிய கழுத்தைப்
பாரினில் இனிய கமுகெனப் பகர்ந்தும்,
வெப்பும் ஊத்தையும் மேவிய வாயைத்
துப்பு முருக்கின் தூய்மலர் என்றும் 32

அன்ன முங் கறியும் அசைவிட்டிறக்கும்
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும்
நீரும் சளியும் நின்று நின்று ஒழுகும்
கூறிய மூக்கைக் குமிழ் எனக் கூறியும்
தண்ணீர் பீளை தவிராது ஒழுகும் 33



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணைப் பார்த்துக் கழுநீர் என்றும்
உள்ளூங் குறும்பி ஒழுகுங் காதை
வள்ளைத் தண்டின் வளம் என வாழ்த்தியும்
கையும் எண்ணெயும் கலவாது ஒழியில்
வெய்ய அதரும் பேனும் விளையத் 34

தக்க தலை யோட்டில் முளைத்து எழுந்த
சிக்கின் மயிரைத் திரள் முகி லென்றும்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
நச்சிச் செல்லும் நரக வாயில்
தோலும் இறைச்சியும் துதைந்து சீப்பாயும் 35

காமப் பாழி கருவிளை கழனி
தூமைக் கடவழி தொளைபெறு வாயில்
எண்சாண் உடம்பும் இழியும் பெருவழி!
மண்பால் காமம் கழிக்கும் மறைவிடம்
நச்சிக் காமுக நாய்தான் என்றும் 36

இச்சித் திருக்கும் இடைகழி வாயில்
திங்கள் சடையோன் திருவருள் இல்லார்
தங்கித் திரியும் சவலைப் பெருவழி
புண் இது என்று புடவையை மூடி
உள் நீர் பாயும் ஓசைச் செழும்புண் 37

மால்கொண்டு அறியா மாந்தர் புகும்வழி
நோய் கொண்டு ஒழியார் நுண்ணியர் போம்வழி
தருக்கிய காமுகர் சாரும் படுகுழி
செருக்கிய காமுகர் சேருஞ் சிறுகுழி
பெண்ணும் ஆணும் பிறக்கும் பெருவழி 38
மலம் சொரிந்து இழியும் வாயிற்கு அருகே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலம்சொரிந்து இழியும் தண்ணீர் வாயில்
இத்தை நீங்கள் இனிது என வேண்டர்
பச்சிலை இடினும் பத்தர்க்கு இரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் பவனை 39

முத்தி நாதனை மூவா முதல்வனை
அண்டர் அண்டமும் அனைத்துள புவனமும்
கண்ட அண்ணலைக் கச்சியிற் கடவுளை
ஏக நாதனை இணையடி இறைஞ்சுமின்
போக மாதரைப் போற்றுதல் ஒழிந்தே! 40

திருவேகம்பமாலை

அறந்தான் இயற்றும் அவனிலுங்கோடி அதிகமில்லம்
துறந்தான் அவனிற் சதகோடிஉள்ளத் துறவுடையோன்
மறந்தான் அறக்கற் றறிவோடிருந்திரு வாதனையற்று
இருந்தான் பெருமையை என் சொல்லுவேன் கச்சியேகம்பனே. 41

கட்டிஅணைத்திடும் பெண்டிரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டிமுறிக்கும் மரம்போல் சரீரத்தை வீழ்த்திவிட்டால்
கொட்டிமுழக்கி அழுவார் மயானங் குறுகியப்பால்
எட்டியடி வைப்பரோ இறைவாகச்சி யேகம்பனே. 42
கைப்பிடிநாயகன் தூங்கையிலேயவன் கையையெடுத்து
அப்புறந்தன்னில் அசையாமல் முன் வைத்தயல் வளவில்
ஒப்புடன் சென்று துயினீத்துப் பின்வந் துறங்குவளை
எப்படி நானம்புவேன் இறைவாகச்சி யேகம்பனே. 43

நன்னாரிற்பூட்டிய சூத்திரப்பாவைநன் னார்தப்பினால்
தன்னாலுமாடிச் சலித்திடுமோஅந்தத் தன்மையைப்போல்
உன்னா லியானுந் திரிவதல்லான் மற்றுனைப்பிரிந்தால்
என்னா லிங்காவதுண்டோ இறைவாகச்சி யேகம்பனே 44


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ அகமும் பொருளும்
இல்லாளுஞ் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவாகச்சி யேகம்பனே. 45

பொல்லா தவனெறி நில்லா தவனைப் புலன்கடமை
வெல்லா தவன்கல்வி கல்லாதவன் மெய் யடியவர்பால்
செல்லா தவனுண்மை சொல்லா தவனின் திருவடிக்கன்பு
இல்லாதவன் மண்ணில் ஏன் பிறந்தேன்கச்சி ஏகம்பனே. 46

பிறக்கும்பொழுது கொடுபோதில்லைப் பிறந்துமண்மேல்
இறக்கும்பொழுது கொடுபோவதில்லை இடைநடுவில்
குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்த தென்று கொடுக்கறியாது
இறக்குங் குலாமருக்கென் சொல்லுவேன்கச்சி ஏகம்பனே. 47

அன்னவிசாரம் அதுவே விசாரம்அது வொழிந்தாற்
சொன்னவிசாரந் தொலையா விசாரநற் றோகையரைப்
பன்னவிசாரம் பலகால்விசார மிப்பாவி நெஞ்சுக்கு
என்னவிசாரம் வைத்தாய் இறைவாகச்சி ஏகம்பனே. 48

கல்லாப்பிழையுங் கருதாப்பிழையுங் கசிந்துருகி
நல்லாப்பிழையும் நினையாப்பிழையும் நின்அஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந் துதியாப்பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப்பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி ஏகம்பனே. 49

மாயநட்போரையும் மாயமலமெனும் மாதரையும்
வீயவிட்டோட்டி வெளியேபுறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்று பின்தாதையைக் கூடிப்பின்தாயைமறந்து
ஏயுமதேநிட்டை என்றான் எழிற்கச்சி ஏகம்பனே. 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் தன் தாய்க்கு பாடிய பாடல்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் – செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி ?

2.முந்தித்தவம் கிடந்து முந்நூறு நாள் அளவும்
அந்திபகலாச் சிவனை ஆதரித்துத் – தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன் ?

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும், தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து – முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன் ?

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே – அந்தி பகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய் தனக்கோ
மெய்யிலே தீமூட்டுவேன் ?

அரிசியோ நான் இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் – உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளி இடுவது அரிசியோ ? தாய் தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ ? கூசாமல் மெள்ள
முகம்மேல் முகம்வைத்து முத்தாடி "என்றன்
மகனே" என அழைத்த வாய்க்கு ?

முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென் இலங்கையில்
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க! மூள்கவே!

வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ! — மாகக்
குருவிபறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ! என்னை மறந்தாளோ — சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்துவரம் கிடந்துஎன்
தன்னையே ஈன்றெடுத்த தாய் ?

வீற்றிருந்தாள் அன்னை வீதிதனில் இருந்தாள்!
நேற்றிருந்தாள் இன்று வெந்து நீறானாள் — பால்தெளிக்க
எல்லீரும் வாருங்கள்! ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவும், விடைகளும்

**வினாக்கள் பகுதி - 1**

- முதன் முதலில் பத்மஸ்ரீ விருதை பெற்றவர் யார் ?
- கோள்களின் இயக்கத்தை கண்டுபிடித்தவர் யார் ?
- சூரிய உதயத்தை முதலில் பார்ப்பவர்கள் யார் ?
- இந்தியாவில் வருமானவரி எந்த ஆண்டு வந்தது ?
- பூமி சூரியனுக்கு அருகில் இருக்கும் நாள் எது ?
- கங்கை உற்பத்தி ஆகும் இடம் எது ?
- அழும் அதிசய சுவர் எந்த நாட்டில் உள்ளது ?
- கலர் பிலிம் ரோலை கண்டுபிடித்தவர் யார் ?
- செயற்கை மழையை உண்டாக்கியவர்கள் ?
- மாணவர்களுக்கு இரண்டு கைகளாலும் எழுதப்பயிற்சி அளிக்கும் நாடு எது ?

**பதில்கள் பகுதி -1**

அன்னை தெரசா, கெப்ளர், ரஷ்யர்கள், 1860, ஜனவரி 3, கோமுகம், எருசேலம் நாட்டில், லிக்னோஸ், இர்வின் லாங்மூர், ஜப்பான்.

**வினாக்கள் பகுதி - 2**

- உலகில் அதிக அளவு சிலை வடிக்கப்பட்ட மனிதர் யார் ?
- மில்லினியம் டோான் எங்குள்ளது ?
- உலகிலேயே அதிக முட்டையிடும் உயிரினம் எது ?
- பைசா கோபுரம் எதனால் கட்டப்பட்டது ?
- லில்லி பூக்களை உடைய நாடு எது ?
- பகவத்கீதை எத்தனை மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது?
- யானையின் கர்ப்பக்காலம் எத்தனை மாதம் ?
- சோகத்தை குறிக்கும் ராகம் எது ?
- நதிகள் இல்லாத நாடு எது ?
- சாணத்திலிருந்து என்ன வாயு கிடைக்கிறது ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்கள் பகுதி - 2

லெனின், கிரீன்விச், கரையான், சலவைக்கல், கனடா, 55 மொழிகளில், 22 மாதம், முகாரி, சவூதி அரேபியா, மீத்தேன்.

வினாக்கள் பகுதி - 3

- இந்தியாவிலுள்ள பாட்னாவின் பழைய பெயர் என்ன ?
- திமிங்கலத்தின் உடலில் எவ்வளவு இரத்தம் இருக்கும் ?
- சீனாவின் புனித விலங்கு எது ?
- மாம்பழத்தின் பிறப்பிடம் எது ?
- ஜப்பானியரின் தேசிய உடையின் பெயர் என்ன ?
- தங்கப்போர்வை நிலம் எது ?
- தென் ஆப்பிரிக்காவுக்கு எத்தனை தலைநகர்கள் உண்டு ?
- கிரிக்கெட் மட்டை எந்த மரத்தால் தயாரிக்கப்படுகிறது ?
- போக்குவரத்து காவலர்களே இல்லாத நாடு எது ?
- சுருக்கெழுத்து முறையை கண்டுபிடித்தவர் யார் ?

பதில்கள் பகுதி - 3

பாடலிபுத்திரம், 8 ஆயிரம் லிட்டர், பன்றி, இந்தியா, கிமோனா, ஆஸ்திரேலியா, மூன்று, வில்லோ மரம், நியூசிலாந்து, பிட்மேன்.

வினாக்கள் பகுதி - 4

- திருக்குறளில் எந்த அதிகாரம் இரண்டு முறை வருகிறது ?
- இந்தியாவின் தேசிய மரம் எது ?
- முதல் தமிழ் பத்திரிகை எது ?
- தமிழில் வெளிவந்த முதல் செய்தித்தாள் எது ?
- இந்தியாவின் முதல் பெண்கவர்னர் யார் ?
- தமிழகத்தின் முதல் பெண்கவர்னர் யார் ?
- இந்தியாவில் விண்வெளி ஆய்வகம் எங்குள்ளது ?
- இந்தியாவின் தேசிய காலண்டர் எது ?
- PIN Code என்பதன் விரிவாக்கம் என்ன ?
- இந்தியாவிற்கு வாஸ்கோடாகாம எந்த ஆண்டு வந்தார் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்கள் பகுதி - 4

குறிப்பறிதல், ஆலமரம், சிலோன் கெஜட்,
சுதேசமித்திரன், சரோஜினி அரிச்சந்திரன்,
பாத்திமா பீவி, பெங்களூர், சகாப்தம்,
Postal Index Code, 1498 -ல்.

வினாக்கள் பகுதி - 5

★ கபடி விளையாட்டு தோன்றிய இடம் எது ?
★ சங்ககாலத்தில் கரையானுக்கு என்ன பெயர் ?
★ உலகிலேயே அதிகமாக சினிமா தயாரிக்கும் நாடு எது ?
★ டென்மார்க் நாட்டின் தேசியப்பறவை எது ?
★ பிரிட்டனை அதிக காலம் ஆண்டவர் யார் ?
★ திட்டக்கமிஷனின் தலைவர் யார் ?
★ இந்தியக் கப்பல் தொழிற்சாலை எங்குள்ளது ?
★ ஐரோப்பிய கண்டத்தின் ஏழ்மையான நாடு எது ?
★ கணினி தயாரிப்பில் முதலிடத்தில் இருக்கும் நாடு எது ?
★ பிரதமரும் மந்திரிகளும் இல்லாத நாடு எது ?

பதில்கள் பகுதி - 5

இந்தியா, வன்மீகம், இந்தியா, வானம்பாடி,
விக்டோரியா மகாராணி, பிரதமர், விசாகப்பட்டினம்,
அல்பேனியா, அமெரிக்கா, சுவிட்சர்லாந்து.

வினாக்கள் பகுதி - 6

முகம்மது நபிகள் பிறந்த இடம் எது ?
குறைந்த வயதில் பத்மஸ்ரீ விருது பெற்றவர் யார் ?
ஆக்டோபஸ்/க்கு எத்தனை இதயங்கள் ?
சர்வதேச உணவுப்பொருள் எது ?
காகமே இல்லாத நாடு எது ?
எரிமலை இல்லாத கண்டம் எது ?
கிறிஸ்துமஸ் மரத்துக்கு என்ன பெயர் ?
உடலில் இரத்தம் பாயாத பகுதி எது ?
தமிழ்நாட்டின் மரம் எது ?
முதன்முதலில் நினைவு அஞ்சல்தலை வெளியிட்ட நாடு எது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்கள் பகுதி - 7

மெக்கா, விஸ்வநாதன் ஆனந்த், மூன்று, முட்டைகோஸ், நீயூசிலாந்து, ஆஸ்திரேலியா, SPRUCE, கருவிழி, பனைமரம், பெரு.

வினாக்கள் பகுதி - 8

★ காந்திஜி உருவம் பொறித்த அஞ்சல் அட்டையை முதலில் வெளியிட்ட நாடு எது ?
★ தமிழ்நாட்டின் மலர் எது ?
★ உலகின் அகலமான நதி எது ?
★ உலகின் 17 பல்கலைகழங்களில் டாக்டர் பட்டம் பெற்ற ஒரே இந்தியர் யார் ?
★ திருப்பூர் குமரன் பிறந்த ஊர் எது ?
★ ஒளி செல்லும் வேகத்தை கண்டுபிடித்த விஞ்ஞானி யார் ?
★ தக்காளியின் பிறப்பிடம் எது ?
★ மிகச்சிறிய கோள் எது ?
★ விவசாயம் முதலில் எங்கு தொடங்கப்பட்டது ?
★ குறைந்த நேரத்தில் சூரியனை சுற்றி வரும் கோள் எது ?

பதில்கள் பகுதி - 8

போலந்து, செங்காந்தள் மலர், அமேசான், டாக்டர். இராதாகிருஷ்ணன், சென்னிமலை, ரோமர், அயர்லாந்து, புளூாட்டோ, தாய்லாந்து, மெர்குரி.

வினாக்கள் பகுதி - 9

★ ஒரு தேனீயால் எத்தனை முறை கொட்ட முடியும் ?
★ மின்தடையை கண்டுபிடித்தவர் யார் ?
★ முகப்பவுடரை கண்டுபிடித்த நாடு எது ?
★ கிரிக்கெட் விளையாட்டு எங்கு தோன்றியது ?
★ கனநீரை கண்டுபிடித்தவர் யார் ?
★ வெப்பநிலை மானியை கண்டுபிடித்தவர் யார் ?
★ சட்டையை கண்டுபிடித்தவர்கள் யார் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் இரும்பு கப்பலைச் செய்தவர் யார் ?
மெர்குரி விளக்குகள் எந்த ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது?
காந்த துருவங்களை கண்டுபிடித்தவர் யார் ?

பதில்கள் பகுதி - 9

ஒரே ஒரு முறை, ஓம், இத்தாலி,
இங்கிலாந்து, யூரி, சிக்ஸ்,
எகிப்து நாட்டவர்கள், வில்கின்சன், 1912-ல்,
ரோஸ்.

வினாக்கள் பகுதி - 10

- இந்தியாவின் மிக உயர்ந்த விருது என்ன ?
- விண்வெளியில் வைரம் தயாரித்த முதல் நாடு எது ?
- ஒமன் தலைநகரம் எது ?
- பள்ளிக்கூடத்தை முதன் முதலில் உருவாக்கியவர்கள் யார் ?
- சிப்பியில் முத்து விளைய எத்தனை ஆண்டுகள் ஆகும் ?
- ஜப்பானின் சுதந்திர தினம் எந்த நாள் ?
- ஜனவரி ஆண்டின் தொடக்கமாக எப்போது சேர்க்கப்பட்டது ?
- இத்தாலியின் தலை நகர் எது ?
- இந்தியாவின் முதல் சபாநாயகர் யார் ?
- தெனிந்தியாவின் உயரமான சிகரம் எது ?

பதில்கள் பகுதி - 10

பாரத ரத்னா
ஜப்பான்,
மஸ்கட்,
ரோமானியர்கள்,
15 ஆண்டுகள்,
ஏப்ரல் 29 -ம் தேதி,
1752-ல்,
ரோம்,
ஜீ.வீ.மாவ்லங்கர்,
ஆனை முடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

★ செல்லையா + ★ பார்வதிப்பிள்ளை
↓
நடராசா

★ தாமோதரம்பிள்ளை + ★ செல்லம்மா
↓
இராசபூமணி

நடராசா + இராசபூமணி
↓

- தெய்வேந்திரன் + கீதாலட்சுமி
  ↓
  - வினோத் + மதுசா
  - லோகிதன்
  - அபிஷா
- ★ பாலேந்திரன்
- பத்மாவதி + ★ சந்திரபாலன்
  ↓
  - அனோஜன்
- குலேந்திரன் + சந்திராதேவி
  ↓
  - புவீஷன்
  - சதுர்சிகா

★ அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

"எந்நன்றி கொன்றவர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகிய அமரர் இராசபூமணி அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஓடிவந்து எங்கள் துயரத்தை தங்கள் துயராக எண்ணி எம்மோடு துயர் பகிர்ந்துகொண்ட உறவினர்கள், நண்பர்கள் , அயலவர்கள் ஆகியோருக்கும் இறுதிக் கிரியைகளில் பங்குகொண்டவர்கள், கண்ணீர் அஞ்சலிகள், பதாதைகள், மற்றும் உடல்சார் உதவிகளையும் எமக்களித்த அன்புள்ளங்களுக்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொலைபேசியில் துயர்பகிர்ந்த உறவுகளுக்கும் இன்றைய தினம் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடாத்திய குருமாருக்கும், இம்மலரினை அச்சிட்டு உதவியவர்களுக்கும் மனமார்மர்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

இங்ஙனம்
குடும்பத்தினர்

எளிமையாக இருப்பது தான் உண்மையாக
வாழக் கற்றுக்கொடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லு வைத்த கோவிலெல்லாம்
கை எடுத்து கும்பிட்டீர் அம்மா!

விக்கினங்கள் தீர்க்கும் விக்னேஸ்வரராம்
எங்கள் சித்தி விநாயகர்
அம்மா!

உரலிலே மாவிடித்து உடன்
பாசிப்பயறும் வறுத்து நல்லதோர்
திருவெம்பா பூசை மார்கழியில்
செய்துமே வந்தோம் அம்மா

ஆடியிலே அம்மனுக்கு ஆடிப்பூரம்
கண்ணகைக்கு களியும் முத்துமாரிக்கு
முத்துறுண்டையும் செய்து
படைத்தீரோ அம்மா

நல்லைக் கந்தனுக்கோ
விரதமாம்
தெருக்கிணற்றிலே தோயல்
பிள்ளையாரை வலம் வந்தோர்
வணக்கம் தலையிலே
தண்ணீர்க்குடம் வீடு வரை
செல்வீர் அம்மா

வாழை இல்லா ஊர் என்று
கல்லையிலே சோறு கண்டோம்
ஊர் வளம் பெற்ற வேளையிலே
நாம் அங்கிருக்கவில்லையம்மா

மா பலா வாழை என முக்கனியும்
உண்டுடனே பார்க்கையிலே
மகிழ்ந்தோமே அம்மா
இருந்தாலும் மாதந்தோறும்
சதுர்த்தியிலே அத்தனையும்
கொண்டங்கு சென்றோமே அம்மா!

ஆனியிலே வேள்வி என்றால்
வெள்ளைப் பிரம்பெடுக்கும்
ஐயனுக்கோ வெள்ளைக் கிடாய்

கூடவே குலத் தெய்வம்
முனிக்கோர்
வளந்துடன் பொங்கல்

பக்கத்தே காக்கும் எம்காவல்
கடவுளாம் வைரவருக்கோர்
கறுப்புக்கடா

இத்தனையும் தவறாமல்
செய்ததையால் நோயின்றி
நொடியின்றி புண்ணியமாய்
சென்றீரோ அம்மா

மாறன் பதிப்பகம்,கிளிநொச்சி-0775562963

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org